1973 மார்ச் 12]

தீண்டாமை ஒழிப்பு பற்றிய திரைப்படம்

* 331 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்துக்கென திரைப்படம் எடுத்துத் திரையிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தத் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கான இளையபெருமாள் அறிக்கை சரிவரப் பயன் படுத்தப்படவில்லை என்ற வகையில் அரசியல் கண்ணோட்டத்தோடு வெளியிலே பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையா ? அப்படியிருப்பின் இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகத் திரைப்படம் தயாரிப்பது பற்றிய கேள்வியாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன்: இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தை நல்லமுறையில் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர் களைக் கொண்டு ஒரு திரைப் படம் எடுக்க அரசாங்கம் முயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : உறுப்பினர்கள் சாதாரணமாக மேடைப் பிரசாரங்கள் செய்தாலே போதும். திரைப்படத்திற்குத் தனியாக ஆட்களை வைத்துத்தான் திரைப் படங்கள் எடுக்கவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகப் படம் எடுப்பதாகச் சொன்னார்கள். அதில் யார் யார் நடிக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் பிள்ளை பிறக்கவில்லை, பெயர் பின்னால்தான் வைக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : இந்த மாதிரியான நல்ல திரைப்படங்களை இன்னும் எவ்வளவு காலத்தில் அரசு எடுத்து முடிக்கும் என்பதையும், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு படங்கள் அரசு வெளியிடும் என்பதையும் அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஹரிஜன நலத் துறை இயக்குநர் கொடுத்திருக்கிற செயற்குறிப்பின்மீது செய்தித் துறையில் உள்ள இயக்குநரிடம் அவர்கள் கொடுத்த குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 1,25,000 செலவில் 20 அல்லது 30 நிமிடங்கள் ஓடக்கூடிய சிறிய திரைப்படம் எடுக்கமுடியும். பத்து நகல்கள் எடுக்கலாம் என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அதன்மீது அரசு உரிய நடவடிக்கைகளைத் தற்போது எடுக்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திரைப்படத்தை யாருடைய கையில் ஒப்படைக்கப் போகிறார்கள்? யார் அதற்கு டைரக்டராக இருக்கப் போகிறார்கள் என்ற விவாத்தையாவது அமைச்சர் அவர்கள் கையில் இருக்குமானால், கூறுவார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செய்தித் துறை மூலமாகத்தான் எடுத்து திரையிடப்படவேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : தீண்டப்படாதவர்கள் கொடுக்கிற வழக்குகளின் மீது போலீஸ் நிர்வாகமும், மற்ற நிர்வாகங்களும் சரியான முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில்லை. இனிமேலாவது தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதிருந்தாலும் பதில் கூறுகிறேன். தீண்டாமைக் குற்றத்திற்காகத் தொடரப்படுகிற வழக்குகள் மீது போலீஸார் சரியாக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதை அறிந்துதான் தனிப் போலீஸ் பிரிவு ஒன்றை இப்போது அரசாங்கம் அமைத்திருக்கிறது. ஆகவே அது ஆறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. தனி போலீஸ் பிரிவு துரித நடவடிக்கைகள் எடுத்து வழக்குகள் பதிவு செய்து வருகிறார்கள்.

1973 மார்ச் 12]

திரு. நா. வீராசாமி : தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காகப் படம் எடுக்கிறபோது புரட்சிகரமான கருத்துக்கள் பலவற்றை நுழைத்தால்தான் முடியும். இப்படிப் புரட்சிகரமான கருத்துக்களை புகுத்தியிருக்கிறார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள் பல படங்களில். ஆகவே அவர்களுக்கு நேரம் இல்லாவிட்டாலும் அந்தப் படத்திற்காகக் கதை, வசனம் எழுதுவதற்காக, அப்படிப் பட்ட கருத்துக்களைப் புகுத்துவதற்காக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அவர்களை எங்கேயோ வெளியில் அழைத்துக் கொண்டு போய் எழுதி வாங்க நமது அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நல்ல யோசனை. அமைச்சர் முயற்சி எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களின் அப்படிப்பட்ட நல்ல தொரு முயற்சியில் துணை இருந்தால் நலமாக இருக்கும்.

சிறுவாடா கிராமத்திற்குச் சமுதாயக்கூடம்.

* 332 **வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சிறுவாடா அரிசன காலனியில் அமைக்கப்படும் சமுதாயக் கூடக் கட்டடம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடக் கட்டடம் கட்ட ஏதும் திட்டமில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த சிறுவாடா கிராமத்தில் ஹரிஜனக் காலனிக்கு ஒரு கம்யூனிட்டி ஹால் கட்டவேண்டும் என்று எப்போது கேட்டுக்கொள்ளப் பட்டது? அப்படி ஒரு ஆய்வு இல்லை என்றால் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆய்வு இல்லை என்று சொல்வதற்கில்லை. அந்தத் திருமணக் கூடம் கட்டவேண்டு மென்று அரசு முடிவு எடுத்தது. ஆனல் அங்கு ஒரு திருமணக் கூடம் கட்டவேண்டுமென்று சொன்னால் ஆயிரத்தில் இருந்து